TNVR140000082007

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**முன்னிலை திருமதி. ப. சிவரஞ்ஜினி, B.Sc., L.L.M.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அருப்புக்கோட்டை.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.99/2007**

-----

1. போத்திராஜ்(இறந்துவிட்டார்)

2. சரோஜா(இறப்பு)

3. போத்திராஜ்

4. சாந்தி

5. சித்ரா --- **வாதிகள்**

(இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 5 வரை வாதிகளை I.A.No. 76/2009 ல் கடந்த 27.07.2010 ம் தேதி ஏற்பட்ட தேதி உத்தரவுப்படி சேர்க்கப்பட்டுள்ளார்கள்)

(பிராது I.A.No.728/2010 ல் கடந்த 27.07.2011 ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி திருத்தப்பட்டுள்ளது)

(2 ம்வாதி இறப்பு சம்பந்தமாக 14-03-2025 ம் தேதிய மெமோ அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது)

(1.A.No.7/2025 ல் கடந்த 18-03-2025 ம் தேதிய உத்தரவுப்படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

**-எதிர்-**

1. ஆழ்வாரம்மாள்

2. கோவிந்தராஜ் (இறந்துவிட்டார்)

3.இளங்கண்ணன் --- **பிரதிவாதிகள்**

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2025.11.25 17:41:48 +0530

(பிராது I.A.No.729/2010ல் கடந்த 27.07.2011ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி திருத்தப்பட்டுள்ளது)

இவ்வழக்கானது கடந்த 09.04.2007ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 25.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பார்த்தசாரதி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.ராஜாதேசிங் அவர்கள் முன்னிலையாகியும் இருந்த நிலையில், வாதிகள் தரப்பில் விசாரணை(Trial)க்கு எவ்வித முன்னெடுப்பும் இல்லாத நிலையில், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

## <u>தீர்ப்புரை</u>

1, தாவாச் சொத்து வாதிகளுக்கு பாத்தியம் என்று விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவாச் சொத்திலுள்ள வாதிகளின் அனுபவத்திற்கு பிரதிவாதிகள் எந்தவித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும்,

2. தாவாச் சொத்தை நோக்கி பிரதிவாதிகள் வீட்டின் கிழக்குசுவரில் வைத்துள்ள ஜன்னல்கள், சன்சேடுகள், மழைத்தண்ணீர், தூம்புகளையும் தாவாச் சொத்தில் கட்டியுள்ள சாக்கடை வாய்க்காலையும் நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் அப்புறப்படுத்தக்கோரியும், தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலம் அப்புறப்படுத்த தோதாக செயலுறுத்துக்கட்டளை வழங்கக்கோரியும்,

3. இவ்வழக்கின் செலவு தொகையை வாதிகளுக்கு, பிரதிவாதிகளை கொடுக்கக்கோரியும் இவ்வழக்கு தாக்கல்.

(பிராது ஐ.ஏ.எண்.728/2010ல் கடந்த 27.7.2011ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி திருத்தப்பட்டுள்ளது).

**The Plaintiff present and the plaintiff counsel also present and contended that there is no relevant precedent to show that the trial should not be commenced while the commissioner petition is pending. He further contended**

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2025.11.25 17:42:03 +0530

**that the commissioner's report and plan are pending because the GR survey records have been completely converted into town survey records. In order to measure the property correlation of both survey records is necessary and hence it has taken more time. He further contended that without the commissioner's report and plan, the trial cannot be commenced. This suit has filed in the year 2007, but the trial of the suit has not yet commenced. This Court has given sufficient opportunities to the plaintiff since 07.08.2025. Despite several opportunities, the plaintiff has not been ready to commence the trial. Therefore, this Court dismissed the suit for default.**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2025.11.25 17:42:09 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அருப்புக்கோட்டை.**

------------------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

அருப்புக்கோட்டை.

அ.வ.எண்.99/2007

சீரான/வரைவுத் தீர்ப்புரை

நாள் – 25.11.2025

------------------------------------